A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi


# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 67 / 2023</u>**

திருமதி R.பிரேமா (Allottee),
Rep. திரு R. வித்யா சங்கர்,
H-7/K, TNHB, HIF Flat,
முதல் தளம் 70 Feet ரோடு, S.P. கார்டன்,
தி.நகர், சென்னை -17 .

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு R.வித்யாசங்கர்)

எதிர்

1. செயற்பொறியாளர் /இ&ப/தி.நகர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/33 கே.வி. வள்ளுவர் கோட்டம் துணை மின் நிலைய வளாகம்,
3வது தளம், எம்.ஜி.ஆர் சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை-34.

2. உதவி செயற்பொறியாளர் /இ&ப/சைதாபேட்டை,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். 22, தொண்டர் நகர், சைதாபேட்டை, சென்னை - 600 015.

3. உதவி மின்பொறியாளர் /இ&ப/ CIT நகர்-I,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். 22, தொண்டர் நகர், சைதாபேட்டை, சென்னை - 600 015.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு A.வெங்கடேசன், செயற்பொறியாளர் /இ&ப/தி.நகர்
திரு M. சரவணன், உதவி செயற்பொறியாளர் /இ&ப/சைதாபேட்டை
திரு R. செந்தில்குமார், உதவி மின்பொறியாளர் /இ&ப/ CIT நகர்-I)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 07-09-2023</u>**

**<u>கேட்புரை நாள்: 16-11-2023</u>**

**<u>ஆணை நாள்: 20-11-2023</u>**

07.09.2023 அன்று பெறப்பட்ட திருமதி R.பிரேமா (Allottee), Rep. திரு R. வித்யா சங்கர், H-7/K, TNHB, HIF Flat, முதல் தளம் 70 Feet ரோடு, S.P. கார்டன், தி.நகர், சென்னை – 17 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 67/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 16.11.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

காலகெடுவுக்குள் மின்பயன்பாடு தொகை செலுத்தியும் தனது வீட்டில் மின் இணைப்பு 09.03.2023 அன்று துண்டிக்கப்பட்டதால் தனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு ரூ.50,000/- வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார். மேலும் மின் இணைப்பு துண்டிப்பிற்கு முன்பு தனக்கு அறிவிப்பு அளிக்காததன் விபரம் தெரிவிக்க வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

## 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தனது வீட்டின் மின் இணைப்பு எண் 01-271-028-281-இல் ஏற்பட்ட மின்தடை குறித்து மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தின் அடிப்படையில் களஆய்வு செய்து ஒருமுனை மின்காப்ப இழையில் ஏற்பட்ட பழுதின் காரணமாக மின்தடை ஏற்பட்டு சரி செய்யப்பட்டதாக உதவி செயற்பொறியாளர் /இ&ப/சைதாபேட்டை அவர்கள் மேல்முறையீட்டாளருக்கு விளக்கம் அளித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் விளக்கம் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் சென்னை மின்பகிர்மான வட்டம்/மையம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சென்னை மின்பகிர்மான வட்டம்/மையம் 02.08. 2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 சென்னை மின்பகிர்மான வட்டம்/மையம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 02.08.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*i. The complaint of the petitioner that is the electricity to the LT service connection a/c No. 271-028-281 had been disconnected by TANGEDCO on 09.03.2023 without prior intimation by misuse of power even after payment of CC charges well before due date, was found to be misconception of the petitioner and is contrary to the documents submitted before the forum.*

*ii. Since it is found from the records produced by the respondent that there was no disconnection of the electricity supply to the LT service connection A/c No. 271-028-281 either manually or through remote made by the licensee for non-payment of charges. Hence, the deliberation on the request for compensation in respect of his claim does not arise.*

*With the above direction the petition is disposed off."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 16.11.2023 அன்று நேரில் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு R.வித்யாசங்கர் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் A.வெங்கடேசன், செயற்பொறியாளர் /இ&ப/தி.நகர், திரு M. சரவணன், உதவி செயற்பொறியாளர் /இ&ப/சைதாபேட்டை மற்றும் திரு R. செந்தில்குமார், உதவி மின்பொறியாளர் /இ&ப/ CIT நகர்– I, சென்னை மின் பகிர்மான வட்டம்/மையம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள்

சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மின் கட்டணம் செலுத்திய பின்பு மின்சார விநியோகம் துண்டிப்பு செய்தது எவ்விதமான முன்அறிவிப்பு இன்றி நடந்ததால், உரிய விளக்கம் பொருட்டு முறையிடுவதாக வாதிட்டார். மேல்முறையீட்டாளர் தன் புகார் மனு மீது, மின்நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றம் நடுநிலையுடன் செயல்படவில்லை என்று தீர்ப்பு மூலம் உணரவும், அறியவும் முடிகிறது என்றும் மேலும், தன் கடிதம் தேதி 24.5.23ல் மின்நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றம், சென்னை –34 முறையீட்டு மனுவில் மிக தெள்ள தெளிவாக பதிவு செய்த புகாருக்கு தான் உரிய ஆவண சான்று அளிக்கவில்லை தீர்ப்பு மன்றம் முன்பு என்பது சரியல்ல எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 புகார் தன்மையே எந்த முன் அறிவிப்புமின்றி மின்சாரம் தொடர்ந்து அளிக்கப்படாமல் நிறுத்தப்பட்டது என்பதும், அறிவிப்பு செய்யப்படவேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவு செயல்படுத்தப்படவில்லை என்பதும் தான் சமீப செய்தி Times of India 10.8.23ல் செய்தி விபரம் Power cuts, but no alert by SMS consumer's என்பதில் கூடுதல் செய்தி அறிவது மின்தடை/நிறுத்தம் ஏற்பட்டால் "Urja Mitra Portal" மூலம் குறுந்தகவல் / SMS அனுப்ப வேண்டும் என்பதே மேற்படி செய்தியில் 10,8,23 முன்தகவல் அளிக்கப்படவில்லை என்பதே மின்துறைதன் விதிகளை முழுமையாக பின்பற்றுவதோ (அ) செயல்படுத்தப்படுவது இல்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 எதிர்மனுதாரர் பொ. AE/O&M/CIT Nagar/ICAEE/O&M/Saidapet ப/3 வ.ஏ. 4 குறிப்புப்படி LT மின் சப்ளே நிறுத்தப்படவில்லை என்பதற்கும், தொடர்ச்சியாக செயல்பட்டு, தனக்கு மின்சப்ளே இயங்கியது என்பதற்கு என்ன ஆவண சான்று/ஆதார விபரம் எங்கும் காணப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 110 KV மின் நிலைய உற்பத்தி பகிர்மான கழகம், சென்னை –34 பொறுப்பு பொறி.A. வெங்கடேசன் துறை கழகம் தேதி 28.6.23ல் தெள்ள தெளிவாக பதிவு செய்துள்ள 2வது பாரா வாசகம் 9.3.23 அன்று சுப்புபிள்ளைத் தோட்டப் பகுதியில் பில்லரில் ஒரு முனையில் ஏற்பட்ட பழுதின் காரணமாக மின்தடை ஏற்பட்டு பின்னர் சரி செய்யப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டது" என்று பதிவு செய்யப்பட்டு உள்ளதாகவும், தன் புகாரின் உறுதியை /தன்மைக்கு உரிய சான்று எனவும், ஆனால் AE/O&M/CIT Nagar I&AEE/O&M/Saidapet ப–3ல் வ.எண் 4 விபரம் மாறுபாடாக உள்ளது? என்றும் அதிகாரிகளின் சொல், செயல், ஆவணப் பதிவு அனைத்தும் எத்தகைய பொய் தகவல் தெரிவித்து உள்ளார் என்பதற்கு உரிய ஆவணம் / ஆதாரம் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 தன் கடித தேதி 30.6.23ல் பல வினாக்களை எழுப்பியும், கடிதம் பெற்ற பொறியாளர் A. வெங்கடேசன் மறுப்பு எதுவும் ஏன் கூறவில்லை, பொறியாளர் A.வெங்கடேசன் தன் கடித தேதி 28.6.23ல் தான் குறிப்பிட்ட புகார் பதிவு படி மின் நிறுத்தம் என்பதை தன் தனி திறமையால் எப்படி மின் தடை என்று கூறுகிறார் எனவும், தன் வசம் இரு பொறியாளர் விவரப்படி வ.எண்.3 தெரிவித்த விபரம் சரியல்ல, அன்றி தன் வசம் சமரசம் செய்யவே வந்தனர் எனவும், மேலும் 110 KV 100, MGR சாலை அலுவலக பணியாளர் கீதா பல்வேறு தவறான விளக்கம் அளித்ததும் தான் மறுத்து தெரிவித்த விபரம், இது அனைத்தும் தன் கடிதம் 30.6.23ல் பதிவு செய்து மின்நுகர்வோர் நீதி மன்றம் எப்படி மறைத்தது விசாரணை செய்தது விவரம் /விளக்கம் தருக எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 நேரில் வருகை புகார்தாரர் வரவில்லையென்றாலும் ஏன் இதர மாற்று வழியை செயல்படுத்த முன்வரவில்லை? குறிப்பாக வீடியோ பதிவு ஆவண வகை, தொலைபேசி உறையாடல் பதிவு என்று பல பயன்பாடு உள்ள சமயம்? காவல் விசாரனைக்கு அழைக்காது இருப்பிடம் சென்று சர்சார்ஜை மேற்கொள்ள வேண்டும் என்று வழிகள் உள்ளன எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 எனவே தன் முறையீடுபடி தன் மன உளைச்சல், மன அழுத்தம் அலுவலக செயல் நடைமுறை குறைப்பாடு ஆகிய காரணங்களால் தனக்கு ஏற்பட்ட / செய்யப்பட்ட

தவறுக்கு நஷ்ட ஈடு தொகை ரூ.50,000/- அளிக்க வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மனுதாரர் திரு. R. வித்தியாசங்கர் H-7K TNHB, HIG Flat, முதல் தளம் 70 அடி சாலை, S.P.கார்டன், தி.நகர், சென்னை-17 அவர்கள் மேற்பார்வை பொறியாளர்/செ.மி.ப.வ/ மையத்திற்கு அளித்த புகார் மனு நாள் 24.05.2023 அன்று தேதியில் கிடைக்கப்பெற்ற கடிதத்தின் அடிப்படையில் கள ஆய்வினை செய்து 28.06.2023 அன்று புகார்தாரருக்கு விளக்க கடிதம் அனுப்பப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேலும் அளித்த விளக்கம் திருப்திகரமாக இல்லாததால் 30.06.2023 அன்று மனுதாரர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் புகார் அளித்ததன் அடிப்படையில் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் முன் 12.07.2023 மதியம் 03:00 மணியளவில் ஆஜராகுமாறு 01.07.2023 அன்று மனுதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 இந்நிலையில் மின் நுகர்வோர் மீண்டும் தங்கள் புகாரினை 04.07.2023 அன்று மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு கடிதம் அனுப்பியிருந்ததாகவும், அதை தொடர்ந்து 26.07.2023 அன்று மின் நுகர்வோருக்கு குறைதீர்க்கும் மன்றத்தில் இறுதி உத்தரவு வழங்கபட்டதாகவும், மேலும் 05.09.2023 அன்று மனுதாரர் மின்குறைதீர்ப்பாளர் மையத்தில் மேல்முறையீட்டு மனு செய்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்..

6.4 ம.சரவணன், த/பெ.மணி, வயது 55, உதவி செயற்பொறியாளர்/இ&ப/சைதாப்பேட்டை சென்னை மின்பகிர்மான வட்டம்/மையம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், எண்.22, தாடண்டர் நகர், சைதாப்பேட்டை, சென்னை - 15 ஆகிய தான் புகார் மனுதாரர் திரு.R.வித்யாசங்கர், H-7K. TNHB. HIG Flat, முதல் தளம் 70 அடி சாலை, S.P.கார்டன், தி.நகர் சென்னை-17 அவர்கள் அளித்த புகார் மனு நாள் 24.05.2023 அன்று தேதியில் கிடைக்கப்பெற்ற கடிதத்தின் அடிப்படையில் கள ஆய்வினை மேற்கொண்டதாகவும், 09.03.2023 அன்று சுப்புபிள்ளை தோட்டம் பகுதியில் பில்லரில் ஒருமுனை மின்காப்ப இழையில் (Fuse) ஏற்பட்ட பழுதின்

காரணமாக மின்தடை ஏற்பட்டு சரி செய்யப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டதாகவும், மேலும் அச்சமயம் அருகில் உள்ள வீடுகளுக்கு மற்ற இரு முனைகளில் சீரான மின்சாரம் சென்று கொண்டிருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மனுதாரர் கூறியிருந்த மின்கம்ப புகார் எண்.TNBCL1454063, தேதி 09.03.2023 நேரம் 11:12:49 billing issue–ன் அடிப்படையில் கணினி பதிவேட்டினை ஆய்வு செய்ததில் 09.03.2023 அன்று ஏற்பட்ட மின்தடை மின்கட்டணம் செலுத்தாத காரணத்தினால் மின் துண்டிப்பு செய்யப்படவில்லை எனவும், மேலும் மின் துண்டிப்பு செய்ததற்கான DC/RC தொகையும் வசூலிக்கப்படவில்லை எனவும், மேலும் ஸ்மார்ட் மீட்டர் பதிவிறக்கத்தில் பெறப்பட்ட தரவுகளின்படி 09.03.2023 அன்று மின் மீட்டர் செயல்பாடு காலை 09.30 மணி வரை மின்சாரம் இயக்கத்தில் இருந்திருக்கிறது மற்றும் 09.30 மணிக்கு மேல் 12.00 மணி முன்பு வரை மின் இயக்கம் செயல்படாமல் பிறகு 12.00 மணி முதல் மீண்டும் மின் இயக்கம் செயல்பாட்டில் இருந்ததிற்கான தரவுகள் மின் மீட்டரில் பதிவாகி உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 எனவே சி.ஐ.டி நகர்–1 பிரிவு Smart city பகுதிகளில் உள்ளதால் எந்தவொரு மின் இணைப்பை துண்டிக்கவோ அல்லது மறு மின் இணைப்பு கொடுக்கவோ விரிவு அலுவலகத்தின் மூலமாக செயல்படுத்த முடியாது எனவும், இந்த செயல்பாடுகள் அனைத்தும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைமை அலுவலக கணினி மூலமாக மட்டுமே செயல்படுத்த முடியும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளரின் முறையீட்டு மனுவில் காலகெடுவுக்குள் மின்பயன்பாடு தொகை செலுத்தியும் மின் இணைப்பு எண் 01–271–028–281, நாள் 09.03.2023–இல் துண்டிக்கப்பட்டது. மேலும் மின் இணைப்பு துண்டிப்புக்கு முன்பு அறிவிப்பு தனக்கு அளிக்கப்படாமலும் விபரம் தெரிவிக்காமலும் தன் முறையீடு படி தனக்கு ஏற்பட்ட மன

உளைச்சல், மன அழுத்தம், அலுவலக செயல் நடைமுறை குறைப்பாடு ஆகிய காரணங்களால் தனக்கு ஏற்பட்ட/செய்யப்பட்ட தவறுக்கு நஷ்டஈடு தொகை ரூ.50,000/- அளிக்க வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 09.03.2023 அன்று சுப்புபிள்ளை தோட்டம் பகுதியில் பில்லரில் (மின்கல பகிர்மான பெட்டியில்) ஒருமுனை மின்காப்ப இழையில் (Fuse) ஏற்பட்ட பழுதின் காரணமாக மின்தடை ஏற்பட்டு சரி செய்யப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டதாகவும், மேலும் அச்சமயம் அருகில் உள்ள வீடுகளுக்கு மற்ற இரு முனைகளில் சீரான மின்சாரம் சென்று கொண்டிருந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 மேலும், மனுதாரர் கூறியிருந்த மின்கம்ப புகார் எண்.TNBCL1454063, தேதி 09.03.2023 நேரம் 11:12:49 billing issue-ன் அடிப்படையில் கணினி பதிவேட்டினை ஆய்வு செய்ததில் 09.03.2023 அன்று ஏற்பட்ட மின்தடை மின்கட்டணம் செலுத்தாத காரணத்தினால் மின் துண்டிப்பு செய்யப்படவில்லை எனவும், மேலும் மின் துண்டிப்பு செய்ததற்கான DC/RC தொகையும் வசூலிக்கப்படவில்லை எனவும், மேலும் ஸ்மார்ட் மீட்டர் பதிவிறக்கத்தில் பெறப்பட்ட தரவுகளின்படி 09.03.2023 அன்று மின் மீட்டர் செயல்பாடு காலை 09.30 மணி வரை மின்சாரம் இயக்கத்தில் இருந்திருக்கிறது மற்றும் 09.30 மணிக்கு மேல் 12.00 மணி முன்பு வரை மின் இயக்கம் செயல்படாமல் பிறகு 12.00 மணி முதல் மீண்டும் மின் இயக்கம் செயல்பாட்டில் இருந்ததிற்கான தரவுகள் மின் மீட்டரில் பதிவாகி உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேற்கூறிய வாதி பிரதிவாதிகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் ஆவணங்களின் அடிப்படையில் அவருடைய முறையீட்டின் பொருள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *" மின் கட்டணம் செலுத்திய பின்பு மின்சாரம் சப்ளை துண்டித்தது/நிறுத்தியது எவ்விதமான முன்னறிவிப்பு இன்றி உரிய விளக்கம்-நிவாரணம் தேவை குறித்து."*

அதாவது தன்னுடைய மின் இணைப்புக்கு மின் கட்டணம் செலுத்திய நிலையில் 09.03.2023 அன்று மின் இணைப்பு துண்டிப்பு செய்ததாக முறையிட்டுள்ளார்.

7.6 இந்நிலையில் ஒருவருடைய மின் இணைப்பு துண்டிப்புக்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு விதி 21–ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"21. மின்வழங்கல் துண்டிப்பு :*

*சட்டத்தின் 56 ஆவது சட்டப் பிரிவு, மின் கட்டணம் செலுத்தத் தவறிய மின் வழங்கல் துண்டிப்பு பற்றி பின்வருமாறு கூறுகிறது.*

*(1) அவருக்கு மின்சாரம் வழங்கல் அல்லது செலுத்துதல் அல்லது பகிர்தல் அல்லது சுமந்து செல்லல் (wheeling)தொடர்பாக உரிமதாரருக்கோ மின்னாக்கக் குழுமத்துக்கோ, தனியொருவர், மின்சாரக் கட்டணமாகவோ அல்லது அது தொடர்பான மின்சாரக் கட்டணமல்லாத வேறுபிற தொகையாகவோ அமைந்த நிறுவைகளைக் கட்டப் புறக்கணித்தால், உரிமதாரரோ அல்லது மின்னாக்கக் குழுமமோ (generating company) எழுத்து மூலமாகச் சரியான (clear) 15 நாட்களுக்கான எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்து விட்டு, அவருக்குரிய கட்டணத்தை அல்லது வேறு பிற தொகையை, வழக்கு மூலமும் மீட்பதற்குக் குந்தகமேதுமில்லாதபடி, மின்சார வழங்கலைத் துண்டிக்கலாம். மேலும் அந்நோக்கங்கருதி மின்சாரம் வழங்கும் எந்த மின் தொடரையும் துண்டிக்கலாம் அல்லது கழற்றிவிடலாம். மின்சாரத்தை வழங்கிய, செலுத்திய பகிர்ந்த அல்லது சுமந்து சென்ற பணியமைப்புகள் உரிமதாரரின் அல்லது மின்னாக்கக் குழுமத்தின் சொத்தாகையால், மின் கட்டணத்தையோ அது சார்ந்த வேறுபிற கட்டணத்தையோ, உரியவர் மின் வழங்கல் துண்டித்தபிறகு மீளவிணைப்பதற்காகும் செலவினங்களையும் சேர்த்துக் கட்டும்வரை மின்னிணைப்பு துண்டிப்பு தொடரலாம். ஆனால் அதற்கு மேல்நீடிக்கக் கூடாது."*

7.7 மேற்கூறிய விதியின்படி மின் கட்டணம் செலுத்த தவறிய நுகர்வோருக்கு மின் துண்டிக்கப்படும் என தெரிய வருகிறது. மேலும் மின் துண்டிப்புக்கான காலகெடு தேதி, அறிவுப்புக் கால இடைவெளியீடுக்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தெகுப்பு 14–ஐ ஆராய விரும்புகிறேன்.

***"14. காலக்கெடு தேதிகளும் அறிவிப்புக் கால இடைவெளிகளும்:***

*(1) உரிமதாரர் மின்சாரம் சார்ந்த கட்டணத்தைச் செலுத்த பின்வரும் சிறும (Minimum) நாட்களை கெடு தேதிகளுக்கும் அறிவிப்புக் கால இடைவெளிகளுக்கும் தருதல் வேண்டும்.*

*(a) தாழ்அழுத்த மின்னிணைப்புகளுக்கு, கெடு தேதி மின்னளவி அட்டையில் பதிவு செய்த பிறகு 5 நாட்களுக்குக் குறையாமலும், கட்டணம் செலுத்தாமைக்காகத் துண்டிப்பு செய்வதற்கான அறிவிப்புக் கால இடைவெளியாக தெளிவான முழு (clear) 15 நாட்களும் தரவேண்டும். அறிவிப்புக் கால இடைவெளிக்குத் தாமதச் செலுத்த உபரிக் கட்டணம் ஏதும் கூடாது.*

*(b)xxx*

*(2) நுகர்வோர் மின்னளவி அட்டையில் உரிமதாரர் குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் மின்னோட்ட நுகர்வுக் கட்டணத்தைச் செலுத்தாத தாழ் அழுத்த நுகர்வோர்களைப் பொருத்தவரையில், மின்னளவி அட்டையில் உள்ள அறிவிப்புக்கால இடைவெளியே நுகர்வோருக்கான கட்டணம் செலுத்துவதற்கான அறிவிப்பாகக் கொள்ள வேண்டும். அறிவிப்புக் கால இடைவெளியில் கட்டணத்தைச் செலுத்தினால் அதைப் பெற்றுக் கொள்ளலாம். அறிவிப்புக் கால இடைவெளியின் கடைசி நாள் விடுமுறை நாளாக அமைந்துவிட்டால் அறிவிப்புக் கால இடைவெளி நீட்டிக்கப்பட்டு, துண்டிப்புத் தவிர்ப்பதற்குக் கட்டணம் செலுத்தும் கடைசி நாள் அடுத்த பணிசெய்யும் நாளாக அமைய வேண்டும்.*

***14.A தானியங்கி மின் பயனீட்டுக் கணக்கீட்டு அமைப்புமுறையின் கீழ் நுகர்வோருக்கான அறிவிப்பு:***

*இந்த விதித்தொகுப்பின் 5,8,13,14 மற்றும் 16 ஆம் ஒழுங்குமுறை விதிகளில் அல்லது மின்பகிர்மான விதித் தொகுப்பின் ஏதாவது வகைமுறைகளில் எது எவ்வாறு இருப்பினும், தானியங்கி மின் பயனீட்டுக் கணக்கீடு (AMR) தொழில்நுட்பவியல் மூலமான தானியங்கி மின் பயனீட்டுக் கணக்கீட்டு அமைப்புமுறை வினைத்திறமிக்க மின்னளவிகளைப் பயன்படுத்தி மேம்பட்ட மின்னளவியிடல் கட்டமைப்பு (AMI) தொழில்நுட்பவியல் / வினைத்திறமிக்க மின்னளவியைப் பயன்படுத்தும் ஏதாவது பிறமாதிரி தொழில்நுட்பவியல் ஆகியவைகளை உரிமதாரர் எங்கெல்லாம் செயற்படுத்துகிறாரோ அங்கெல்லாம் பட்டியலிடல் விவரங்களான மின்நுகர்வு, மின்நுகர்வுக்கான கட்டணங்கள், கட்டணம் செலுத்துவதற்கான உரிய நாள் கூடுதல் பிணைவைப்புத் தொகைக்கான கேட்பு, ஏதாவது பிற கேட்பு / தகவல், முதலியன, மின்னஞ்சல் / குறுஞ்செய்தி / கைப்பேசி பயன்பாடு / ஆணையத்திற்கு தகவல் அளித்துவிட்டு பின்னர் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் பின்பற்றக்கூடிய ஏதாவது பிற மின்னனு முறைமை ஆகியவற்றின் மூலமாக தெரியப்படுத்தப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய செய்தியளிப்பானது நேர்வுக்கேற்ப அத்தகைய நோக்கத்திற்காக வெளியிடப்பட்ட அறிவிப்பாகக் கருதப்படுதல் வேண்டும்."*

எனவே மேற்கூறிய விதிப்படி மின்னளவி அட்டையின் பதிவின் அடிப்படையில் நுகர்வோருக்கு மின் துண்டிப்பை தவிர்க்க தக்க முன் நடவடிக்கையில் செயல்பட வேண்டும் என அறிய முடிகிறது. மேலும் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு Smart Meter நிறுவப்பட்ட பகுதியில் வருவதால், மேல்முறையீட்டாளருக்கு மின் கட்டணம் உரிய காலத்தில் செலுத்த வேண்டும் என்ற குறுஞ்செய்தி அனுப்பப்படவில்லை என்பதும் உறுதியாகிறது.

7.8 இது சம்பந்தமாக, நான் சான்று சட்டம், 1872 section 35 விதியை ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"35. Relevancy of entry in public record or an electronic record made in performance of duty. An entry in any public or other official book, register or record or an electronic record stating a fact in issue or relevant fact and made by a public servant in the discharge of his official duty or by any other person in performance of a duty specially enjoined by law of the country in which such book, register or record or an electronic record is kept is a relevant fact."*

இந்த வழக்கை பொருத்தவரை எதிர்மனுதாரர் வாதங்களின் அடிப்படையில் மின் நுகர்வோர் பதிவேட்டும் Evidence Act படி ஆய்வு செய்ததில் 09.03.2023 அன்று மின் துண்டிக்கப்பட்டதாக பதிவு செய்யப்படவில்லை. மேலும் மின் துண்டிப்பு செய்யப்பட்டிருந்தால் மின்வழங்கல் மீட்டுதரல் ஆன உரிய கட்டணங்களையும் உரிமதாரர் பெற்றதாக பதிவு செய்யப்படவில்லை. எனவே, மேல்முறையீட்டாளரின் முறையீட்டாக மின் கட்டணம் செலுத்திய பின்பு மின் விநியோகம் துண்டித்து/நிறுத்திய கோரிக்கை சரியான வாதமாகப்படவில்லை என்பதால் அது நிராகரிக்கப்படுகிறது.

7.9 மேல்முறையீட்டாளரின் அடுத்த கோரிக்கையான மன உளைச்சலுக்கான ரூபாய் 50,000/- நஷ்ட ஈடாக வழங்கவேண்டும் என கோரியுள்ளார். இது சம்பந்தமாக நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி **7(11)**ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"7. ......................*
> *..............................*
> *(11) குறை முறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத் திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

**7.10** மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும்பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என தெரிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர்

என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது. மேலும், ஆணையம், நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் வழி இல்லை என்று தெரிகிறது.

7.11 இறுதியாக உரிமதாரரின் செயல்களில் மின் நுகர்வோர் சேவையில் குறைப்பாடு இல்லை என அறிய மின் கட்டணம் செலுத்திய பின்பு மின் துண்டிப்பு செய்ததாக கூறும் வாதங்கள் நிரூப்பிக்கப்படாததால் அதில் சேவை குறைபாடு இல்லை என்றும் அறிய முடிகிறது. எனவே, மேல்முறையீட்டாளர் மின் கட்டணம் செலுத்திய பின்பு மின் துண்டிப்பு செய்ததாக எழுப்பும் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் இழப்பீட்டு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

7.12 எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளருக்கு 09.03.2023 அன்று ஏற்பட்ட மின்தடை பில்லர் (மின்கல பகிர்மான பெட்டி) ஒருமுனை மின்காப்ப இழையில் ஏற்பட்ட பழுதால் மின்தடை ஏற்பட்டு சரிசெய்யப்பட்டது அன்றே மின் கட்டணம் செலுத்திய பின்பு மின்துண்டிப்பு செய்யப்படவில்லை என்பது தான் நடந்த நிகழ்வு என்று ஆவணங்களின் மூலம் தெரிய வருகின்றது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 67/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திருமதி R.பிரேமா (Allottee), – By RPAD
Rep. திரு R. வித்யா சங்கர்,
H-7/K, TNHB, HIF Flat, முதல் தளம் 70 Feet ரோடு,
S.P. கார்டன், தி.நகர், சென்னை –17 .

2. செயற்பொறியாளர் /இ&ப/தி.நகர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/33 கே.வி. வள்ளுவர் கோட்டம் துணை மின் நிலைய வளாகம்,
3வது தளம், எம்.ஜி.ஆர் சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை–34.

3. உதவி செயற்பொறியாளர் /இ&ப/சைதாபேட்டை,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். 22, தொண்டர் நகர், சைதாபேட்டை, சென்னை – 600 015.

4. உதவி மின்பொறியாளர் /இ&ப/ CIT நகர்/I,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். 22, தொண்டர் நகர், சைதாபேட்டை, சென்னை – 600 015.

5. மேற்பார்வை பொறியாளர், –By email
**சென்னை** மின் பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/33 கே.வி. வள்ளுவர் கோட்டம் துணை மின் நிலைய வளாகம்,
எம்.ஜி.ஆர் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை–34.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.